47

உ

சிவமயம்.

தேவிசகாயம்.

OFFIC...
3 - JAN 1921
MADRA...

சிதம்பரம்

ஸ்ரீசிவகாமியம்மன்

# தோத்திரப் பதிகம்.

இஃது

பூவுற்றக்குடி நகரம்

P. K. R. சுப்பிரமணிய வைசியர்

இயற்றியது.

சிதம்பரம்

ஸ்ரீ குஞ்சிதசரண அச்சுக்கூடத்தில்

...ப்பிக்கப்பட்டது.

...12—20.

O23'.38.2114
N20
175673



894.811
2784
3- JAN 1923
MADRAS
175673

உ

சிவமயம்.

ஸ்ரீசிவகாமியம்மன்

# தோத்திரப் பதிகம்.

## விநாயகர் துதி.

அந்தமுள தந்திமுக வெந்தையர விந்தமலர்
சிந்தை தனில் வந்தனைசெய்தேன்.

## ஆசிரியவிருத்தம்.

அகாமுட னுகரமதில் மகாமூறு மணிமந்த்ர
மாதியாமனேக விஞ்சைக்
காதாரமாகி யோமாஞ் செழுத்தாகியே
யழகுபெறு மாறெழுத்தாய்
பகாரிய வெட்டெழுத்தாகி மற்றின்னும் வெகு
பலகோடி மந்திர மதாய்ப்
பத்தியொடு சித்தமதில் வைத்துமகி ழுத்தமர்கள்
பழவினைகளைக் கடிந்து
நிகரிலா வட்டமா சித்திதரு வெற்றியும்
நிறைந்த யோகாதி கூடி.
நெஞ்சமதில் வஞ்சமுள பஞ்சபுலன் மிஞ்சுவழி
நேர்பட திறத்துசெயலும்

05673

# ஸ்ரீசிவகாமியம்மன் தோத்திரப்பதிகம்

வகரவவிழ் தாதியும் வாய்த்துப் பலிக்கவருள்
வடிவான மந்த்ரரூபி [யே
மஞ்சுதவழ் பொன்சிகரியின்சபையர் கொஞ்சுமொ
வஞ்சி சிவகாமி யுமையே. (1)

சீதளமிகுந்த செந்தாமரைப் பூவைநிகர்
திருமுகப்பொலிவி னழகும்
செறியளக பந்தியுஞ் சேல்விழியி னந்தமுந்
திகழ்குழைக் காதினழகும்
காதளவு சேருநன் னுதலு மதிவிட்டிடுங்
களங்கமறு பொட்டி னழகும்
கருதுமெட் பூவினைப் பொருவு நன்னாசியுங்
கனிந்தவா யிதழி னழகும்
மாதாள முல்லையின் முகைதந்த பந்தியும்
வளமிகு கபோல வழகும்
வாசனைமிகுந்த கந்தரமு மிருபுயமுநல்
வனசமுகை பொருவு முலையும்
மாதவர்கள் போற்றி செயு முந்தியுங் கைகளும்
மலர்ப்பதம் போற்றியருளாய் [யில்
மஞ்சுதவழ்பொன்சிகரி யின்சபையர் கொஞ்சுமொ
வஞ்சிசிவகாமி யுமையே. (2)

## ஸ்ரீசிவகாமியம்மன் தோத்திரப்பதிகம்

உனது திருவடிவமுங் கெடியுமடியவர்களி
   னுறுதிக் கிரங்கு செயலும்
ஒப்பற்ற வெற்றியுஞ் சத்தியுஞ் சித்தியு
   மோங்கு நற்குண மேன்மையும்
எனதுபெருமஞ்ஞான வல்வினைகளைக்களைந்
   தீடேற்று நற்கருணையும்
ஈதென விரித்துப் பிரித்துத் துதிப்பதற்
   கெளிதல்ல வென்னன்னையே
தனதுரிய பிள்ளையென் றன்னையருள் புரிவதே
   தக்கதிற்றக் கதம்மா
தாயே தயாபரி சாம்பவி மனோன்மணி
   சச்சிதானந்த ரூபி
மனமுருகு மடியவர்கள் மதியில்வளர் செல்வமே
   வந்தெனக்கருள் புரிகுவாய் [யில்
மஞ்சுதவழ்பொன்சிகரி யின்சபையர் கொஞ்சுமொ
   வஞ்சிசிவ காமியுமையே. (3)

அத்தனது சித்தமகிழ் சுத்தமிகு முத்தமி
   யவ னணைந்திடு புயத்தி
ஆறுமுக வேலனொடு ஞான சம்மந்தனு
   பருந்தமுத முறுதனத்தி

௬ ஸ்ரீசிவகாமியம்மன் தோத்திரப்பதிகம்.

அத்திமுக னுதியா வகிலமெல்லா மீன்று
மங்கமுதிராத கன்னி
அவயவந் தாமரை பல்லவமு மருநிற
மலர்ந்தபல மலருமனையாய்
பத்தியுறு நற்றவர்கள் சித்தமதில் வைத்திலகு
பனிமலர்ப்பூம் பதத்தாய்
பாற்கடற் பாம்பனைப் பள்ளிகொள் கார்நிறப்
பரந்தாமனே டுதித்தாய்
வத்தாத செல்வமிகு வாணர்புகழ் ரூபியே
வந்தெனக்கருள் புரிகுவாய் [யீல்
மஞ்சுதவழ்பொன்சிகரி யின்சபையர் கொஞ்சுமொ
வஞ்சிசிவ காமியுமையே. (4)

ஆரணமு நூல்களுமெ யாய்ந்தாய்ந்து காண்கிலா
வறிவருந் திருவுருவமே
அண்டகோடிகள் பலவுநின்றுநிலை கொண்டிடவு
மணுவினொடு மேருமாகி
காரணமு தானபல சமையமதினடனமிடு
கருணையங் கடலினமுதே
கருத்ததி விருத்தி யன்பா யுருகுமடியவர்கள்
கருதுவா மருளி யெய்க்கும்

பூரணமதாய்நிறைந் தெங்கெங்கு மகிமைபெறு
பொய்யாத துய்ய தேவே
புகலரிய பிரதிஷ்டை யாலயமனேகமாய்ப்
போற்றியுலகோர் துதிக்க
மாறிடா தெங்கணும் வளர்ந்தோங்கு சோதியே
வந்தெனக்கருள் புரிகுவாய் [யில்
மஞ்சுதவழ் பொன்சிகரி யின்சபையர்கொஞ்சுமொ
வஞ்சிசிவ காமியுமையே. (5)

உலகெலாம் பெற்றவைக ளுய்யவைத்தா யதனுள்
உற்றநா னொருவ னலவோ
வுன்னுடைய நாயகனுமொரு குறைவுமில்லாம
லுதவிசெய் பிரபு வலவோ
பெலமிக்க மூத்த சேய்பல விக்கினங்களைப்
பிளக்கின்ற தெய்வ மலவோ
பின்னுமொரு பிள்ளையு மெண்ணரிய வசுரராம்
பெரும்பகை தொலைக்க விலையோ
நலந்தரு சகோதர னந்நாரணனுமிப் புவியை
ரட்சைபுரி கடவுளலவோ
நவில் சிஷ்டி கர்த்தாவவன் பிள்ளைவேதியன்
(6) நாவிலுறை வாணியலவோ

மலருறையு மங்கையுன் மைத்துனி தானல்லவோ
வறுமை துயர்தீர்ப்பதரிதோ [யில்
மஞ்சுதவழ்பொன்சிகரி யின்சபையர் கொஞ்சுமொ
வஞ்சிசிவ காமியுமையே. (6)

தங்கைதபாலிருதிங்கள் தங்கியவர் கூடிடச்
சரிமவுனமுற்ற தாயின்
தாமரைப் பூவுந்தி தன்னிலீரைந்துமதி
தற்பரனை யுன்னியாங்கு
நொந்துவந் திப்புவியில் நோவாத வன்னையால்
நுகர்ந்திருந்தே தவழ்ந்து
நோய்கள்பலவந்தகன் றான்றியே நடந்தோடி
நுவலருங் கல்விகற்று
சந்ததமு மங்கையர்க ளாசை கொண்டவர்களைச்
சார்ந்துமிகு துன்பமுற்று
சமுசார சாகரந்தனில் மூழ்கி யுன்றனிரு
தாட்டுணை களான வங்கம்
வந்துகரை யேற்றிடுவ தறியாதவேனைக்கு
மனமுவந்தினிது காப்பாய் [யில்
மஞ்சுதவழ்பொன்சிகரியின்சபையர் கொஞ்சுமொ
வஞ்சிசிவ காமியுமையே. (7)

சிவகாருண்யமுஞ் சித்தபரி சுத்தமுஞ்
　　சீலமொடு தவவிரதமுஞ்
செல்வமுறுமீகையுஞ் சிவனடியர் நேயமுந்
　　தேவதாபத்தி யன்பும்
நாவருகல்வியும் ஞானமிகு மோனமும்
　　நாடுசெற்சனர்க ளுறவும்
நாவுறுதி யுண்மையு நல்லகுண மேன்மையும்
　　நற்றரும வழியி னியல்பும்
பூவளரு சோலையும் பொற்புளதடாகமும்
　　புஷ்பிக்கும் நந்தவனமும்
புகழ்பசுச் சாலையும் பொலிவன்ன தானமும்
　　புனிதநீர்ப் பந்தல் பிறவும்
மாவளரு மிவையெலாம் வளர்விக்கு மடியர்க்கு
　　வந்துதவிபுரியு மன்னாய்　　　　[யில்
மஞ்சுதவழ் பொன்சிகரி யின்சபையர்கொஞ்சுமொ
　　வஞ்சிசிவகாமியுமையே.　　　　(8)

செய்யுநற் றொழிலெலாங் கைகூடிவரவேண்டும்
　　சித்தசுத்திகளும் வேண்டும்
தெய்வநீயே யென்று நம்பவேண்டுநம்பிச்
　　சிந்தித்திருக்க வேண்டும்

தையலர்கள் மோகவலை தள்ளவேண்டுமரிய
தருமநிலை நிற்கவேண்டும்
தவவிரதமன்பா யிருக்கவேண்டும் பரம
தற்போத மொழிய வேண்டும்
துய்யசிவனோ டுனைத்தொண்டு செயவேண்டுமூழ்
தொடராதிருக்க வேண்டும்
துஷ்டரொடு கூடா திருக்கவேண்டுங் கொடிய
துர்ப்புத்தி நெகிழவேண்டும்
வையமதி லுன்னடிமை வாழவேண்டும் மரபு
வழிவழி தழைக்கவேண்டும் [யில்
மஞ்சுதவழ் பொன்கிகரி யின்சபையர்கொஞ்சுமொ
வஞ்சிசிவகாமியுமையே. (9)

வட்டமொடு பிறைவடிவ முக்கோண நாற்கோண
வளருமைங்கோண நடுவும்
மகிமைபெறு மறுகோண விரிசூலவெண்கோண
வலியநவகோண நடுவும்
திட்டமுள சோடசமுநாற்பான்முக்கோணஞ்
செழிக்குஞ் சிதம்பரத்துந்
திகழுமுனை தன்னிலுஞ் சுற்றுவட்டத்திலுஞ்
சிறந்த சிரிதழ்கடோறும்

அட்டமாசித்தி திருபிரணவந் தன்னிலு
மமர்ந்திடுஞ் செகசோதியே
ஆரணீஇ பூரணீஇ காரணீஇ நாரணீ
யம்மையே நம்புமென்றன்
மட்டடங்காவினைகள் விட்டேகி யோடிட்
வந்தெனக்கருள் புரிகுவாய் [யில்
மஞ்சுதவழ் பொன்சிகரி யின்சபையர்கொஞ்சுமோ
வஞ்சிசிவகாமி யுமையே. (10)

அங்குமா யுங்குமாய் ரீங்கார மோங்கார
மான நானுன்குமாகி
அஞ்சாகி யாறுகி யேழாகி யெட்டாகி
யப்பால னேகமாகிக்
கங்குபகலாகி மறைவாகி வெளியாகியே
கார்மின்னல் மாரியாகிக்
காணுமுருவமுமாகிக்கேட்கு மோசையுமாகிக்
கண்டுமகிழ் காட்சியாகி
பங்காகி யொன்றுகிப் பரவுகீதமுமாகிப்
பத்திவிளை முத்தியாகிப்
பாசபந்தமுமாகி யாசைவீடதுவுமாய்ப்
பரவுமா தாரமாகி

175673



மங்காத செல்வமாய் வாழ்கின்ற தெய்வமே
வந்தெனக்கருள் புரிகுவாய் [யில்
மஞ்சுதவழ் பொன்சிகரி யின்சபையர் கொஞ்சுமொ
வஞ்சி சிவகாமி யுமையே. (11)

123 38 216

வித்தாகி முளையாகி வளர் பயிருமாகியதில்
விளைகின்ற வுணவுமாகி
மேவுசெடியாகி மரமாகியிலை பூவுமாய்
மிளிர்பிஞ்சு காயுமாகி
சத்தான கனியாகி ரசமாகி யினிமையாய்த்
தனித்த செந்தேனுமாகி
சித்தான மகிமையா யற்புதம் பலவுமாய்ச்
சிறந்த நற்புதுமை யாகிச்
செகதல மயக்கமா யவைகளை வெறுப்பதாந்
தெளிந்தமெஞ்ஞான வாழ்வாய்
வைத்தகற்பூரமதில் மூண்டெழுஞ்சோதியே
வந்தெனக்கருள் புரிகுவாய் [யில்
மஞ்சுதவழ்பொன்சிகரி யின்சபையர் கொஞ்சுமொ
வஞ்சிசிவகாமியுமையே. (12)

திருச்சிற்றம்பலம்.

முற்றிற்று.